9th March 1959]

இதிலிருந்து அரசாங்கம் இதை துரிதமாக முடிப்பதற்கு எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை அங்கத்தினர் அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

Sri R. SRINIVASA IYER : ஸார், நான் இந்த இடங்களில் போய் பார்த்தேன். அங்கு பத்து அல்லது பதினைந்து பேர்கள்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் இதை காண்ட்ராக்ட் எடுத்திருப்பவர் வெளி ராஜ்யத்திலுள்ளவர் என்றும் தெரிகிறது. ஆதலால் இதில் சரியானபடி அக்கரை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் குறை கூறுகிறார்கள். ஆகவே அரசாங்கம் இதில் உடனடியாக. . .

Mr. SPEAKER : The hon. Member is giving a lot of information, which is not relevant.

Sri R. SRINIVASA IYER : ஆகவே இனிமேலாவது அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து அதற்குள் வேலையை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட முடியுமா அல்லது இந்த காண்ட்ராக்டை கான்ஸல் செய்துவிட்டு வேறு காண்ட்ராக்ட் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : The work was commenced on 23rd May 1958, and it is expected to be completed by 23rd May 1960.

இப்போது 1960-ல் தான் முடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்குமுன் அவசரப்படுவதில் பிரயோசனமில்லை.

Bridge over Vaigai river near Madurai Town

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ வீ. சங்கரன் அவர்கள் இடத்தில் இல்லாததால் 639 எண்ணுள்ள கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

* 639 *Q.*—**Sri V. SANKARAN** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) when the new overbridge under construction over the river Vaigai, near Madurai town, is expected to be completed;

(*b*) the estimated cost of the work;

(*c*) whether there is a plan to lay out a trunk road through the said bridge as part of the National Highway;

(*d*) if so, the route of the said new road; and

(*e*) the advantages accruing from the said new road?

The Hon. Sri P. KAKKAN : (*a*) September 1959.

(*b*) Rs. 7·383 lakhs.

(*c*) Yes, Sir.

(*d*) The by-pass takes off at mile 295/2 of the existing National Highway, runs through Vilangudi, North and West Madurai, Arappalayam, Kochady, Ponnery, Somasundarapuram Colony, Nadakulam and joins at mile 301/1.

(*e*) The congestion in the town portion is avoided. Through traffic can use this road with considerable saving, avoiding tortuous course within town limits and three level crossings. Heavy vehicles over 5 tons, which are not allowed over the bridge in Madurai town, can also use this road.